# Tolkappiyan Meippādu in Kalithogai

**Dr. R. Nithya**
*Assistant Professor, Department of Tamil*
*Alagappa University Women's College of Arts and Science, Thondi*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981694

**Abstract**
*Literature serves as a mirror of time that vividly captures and reflects the life of the Tamil people. Sangam literature, which includes both Ettuthokai (Eight Anthologies) and Pathuppāu (Ten Idylls), is a great gift bestowed upon the Tamils. Likewise, the ancient grammatical treatise Tolkāppiyam is worthy of high praise. This article seeks to explain how the eight types of Meippādu described by Tolkappiyar are recorded and reflected in the verses of Kalithogai.*

***Keywords:*** *Kalithogai, Meippādu, Body Signs, Physical Gestures, Nagai (Laughter/Smile), Azhugai (Crying/Weeping), Ilivaral (Humiliation/Disgrace), Marutkai (Astonishment/Wonder), Achcham (Fear), Veguli (Anger), Perumitham (Pride), Uvakai (Joy/Delight)*

**References**

1. Sundaramurthi – Tolkāppiyam: PorulAdhikāram, Professor's Commentary, Annamalai University, 1986.
2. Tolkāppiyam: PorulAdhikāram, Ilampuranar Commentary, Saiva Siddhanta Publishing Society, Chennai.
3. A. Viswanathan (Ed.) – Kalithogai: Text and Commentary, New Century Book House, Chennai.
4. S. Vai. Shanmugam – Poetry Structure, New Century Book House, Chennai.

# கலித்தொகையில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

***முனைவர் இரா. நித்யா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழக மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தொண்டி

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழர்களின் வாழ்வை அப்படியே படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குவது இலக்கியங்களே. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய சங்க இலக்கியம் தமிழர்களுக்கு கிடைத்த வரம். அதே போன்று தொன்மை வாய்ந்த இலக்கண நூல் தொல்காப்பியமும் போற்றுதலுக்குரியது. தொல்காப்பியர் எடுத்துரைக்கும் எட்டுவகை மெய்ப்பாடுகள் கலித்தொகையின் பாடலடிகளில் பதிவாகியிருப்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *கலித்தொகை, மெய்ப்பாடு, உடல்குறிகள், நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, பெருமிதம், உவகை.*

பண்டைய காலத் தமிழர்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் இலக்கியமாக விளங்குவது சங்க இலக்கியம். அகம், புறம் இரண்டையும் விளக்கும் விதமாக எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும் ஆகிய சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. மனதில் நினைப்பது அனைத்தையும் வெளிப்படையாகப் பேச முடிவதில்லை. பேச முடியாத சூழலில் மனிதன் உடல் அசைவுகளின் வழி தனது கருத்துக்களை வெளிப்படுத்த மெய்ப்பாடு பயன்படுகின்றது. தொல்காப்பியர் எடுத்துரைத்த எட்டு மெய்ப்பாடுகளை “கற்றோர் ஏத்தும் கலிப்பா என்னும் போற்றுதலுக்குரிய கலித்தொகையின் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மெய்ப்பாடு

மெய் என்றால் உடம்பு (யாக்கை). படு என்றால் தோன்றுவது. அதாவது உடம்பில் தோன்றும் மாறுபாடே மெய்ப்பாடாகும். ஒருவருக்கு ஒரு நிகழ்வு நடந்தாலோ அல்லது ஒருவர் ஒன்றைப் பார்த்தாலோ அல்லது சுவைப் பொருளைச் சுவைத்தாலோ உண்டாகும் புற உடல்குறிகளே மெய்ப்பாடு[1] என்பர். தொல்காப்பியர், பொருளதிகாரம் மெய்ப்பாட்டியலில் எண்வகை மெய்ப்பாடு களை,

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப**
**(தொல். பொருள், மெய், நூ. 247)**

என எடுத்துரைத்துள்ளார். இந்த எட்டு வகை மெய்ப்பாடுகளும் அதன் 32 பொருண்மைகளும் கலித்தொகைப் பாடல்களில் சிலவற்றில் அமைந்துள்ளது.

## நகை

நகை என்பது சிரிப்பு - அணிகலன் எனப் பொருள்படும். சிரிப்பு என்பதை புன்முறுவலித்து நகுதலும், அளவாகச் சிரித்தலும், பெருக வாய்விட்டுச் சிரித்தலும் என மூன்று வகையாகக் கூறலாம். இதனை நான்கு வகையாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

**எள்ளல் இளமை பேதைமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்ப**
**(தொல். பொருள், மெய், நூ. 248)**

என்று கூறுவதன் மூலம், எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்று கூறப்பட்ட நான்கும் நகை தோன்றும் பொருள் ஆகும். கலித் தொகையில் தலைவி தன் தோழியிடம் தன் தலைவன் தனது வீட்டிற்கு ஒருமுறை வந்தான். அப்பொழுது நானும் என் தாயும் வீட்டில் இருந்தோம். தண்ணீர் தாகமாக இருக்கின்றது என்றான். என் தாய் என்னிடம் தண்ணீர் கொண்டு வந்து அவன் நீர் உண்ணும் படிச் செய்துவிட்டு வா என்றாள். நானும் முன்பு குறும்பு செய்தவன் என்று அறியாமல் சென்று என் கையால் தண்ணீர் கொடுத்தேன். கொடுக்கும் பொழுது வளையல் அணிந்த என் கையைப் பிடித்து இழுத்தான். கத்தினேன். தாய் காரணம் கேட்கும் பொழுது விக்கினான் என்றேன். தாய் அவன் பிடரியை நீவினாள். அவனோ என்னைக் கடைக்கண்ணால் கொல்பவன் போலப் பார்த்தான். அவனும் நானும் சிரித்துக் கொண்டோம் என்றாள் தலைவி. இதனை,

> **கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகைக்கூட்டம்**
> **செய்தான், அக் கள்வன் மகன்**
>
> ***(கலித்தொகை., பா. 51. அடி.11-16)***

என்ற பாடலில், நகை மெய்ப்பாட்டின் புறத்தே நிகழும் எள்ளல் சுவையாகிய பொருள் உணர்த்தப்பட்டுள்ளதை அறியலாம்.

**அழுகை**

அழுகை என்பது துன்பம், வலி, பயம், துயரம், கவலை போன்ற பல காரணங்களால் நிகழும். அழுகையாகிய மெய்ப்பாடு குறித்து,

> **இழிவே இழவே அசைவே வறுமை என**
> **விரிவில் கொள்கை அழுகை நான்கே**
>
> ***(தொல். பொருள், மெய், நூ. 249)***

எனத் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகிறது. இழிவு, இழவு, அசைவு, வறுமை என்று சொல்லப்பட்ட நான்கும் கெடுதல் இல்லாத நிலையுடைய அழுகை தோன்றும் பொருள்கள் ஆகும். கலித்தொகைப் பாடல்களிலும் அழுகை மெய்ப்பாடு பயின்று வந்துள்ளது.

> **தொல் எழில் தொலைபு இவள் துயர் உழப்ப, துறந்து நீ,**
> **வல் வினை வயக்குதல் வலித்திமன்; வலிப்பளவை,**
> **நீள் கதிர் அவிர் மதி நிறைவு போல் நிலையாது,**
> **நாளினும் நெகிழ்பு ஓடும் நலன் உடன் நிலையுமோ?**
>
> ***கலித்தொகை., பா. 17. அடி.5-8***

என்ற பாடல் அடிகளில் பழைய அழகெல்லாம் தொலைந்து இவள் துயரம் அடைகின்றாள். இந்த நிலையில் இவளை விட்டு விட்டுச் சென்றாய் எனில், நீ பொருள் சேர்த்து விட்டுத் திரும்பி வரும்போது உன் தலைவி ஒளி இழந்த அமாவாசை நிலவைக் காட்டிலும் இவளது உடல்நலம் அனைத்தும் அழிந்து போகும் எனத் தோழி வருத்தத்துடன் தலைவனிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இதைப் போலத்தான் நம்மில் பலர் நிகழ்காலத்தில் வாழ்வதே இல்லை. பெரும்பாலும் இறந்த காலத்தையோ, எதிர்காலத்தையோ நினைத்தே வாழ்ந்து கொண்டு, நிகழ்காலத்தில் வாழாமல் அழுது கொண்டே வாழ்கின்றனர் என்ற மெய்ப்பாட்டினை எடுத்துரைக்கின்றது.

**இளிவரல்**

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்று சொல்லப்பட்ட நான்கும் இளிவரல் தோன்றும் பொருளாகும் என்பதனை,

> **மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு**
> **யாப்புற வந்த இளிவரல் நான்கே**
>
> ***(தொல். பொருள், மெய், நூ. 250)***

என்னும் நூற்பாவின் வழித் தொல்காப்பியர் கூறுகின்றார். கலித்தொகையில் இளிவரல் அமைந்த பாடல் வரிகளும் வந்துள்ளன.

> **கடை எனக் கலுழும் நோய் கைம்மிக, என் தோழி**
> **தடையின திரண்ட தோள் தகை வாட, சிதைத்ததை...**
>
> ***கலித்தொகை., பா. 45. அடி.14-15***

என்ற பாடலில் தலைவியின் கடைசி நாள் வந்து விட்டதோ என்று காமநோய் தந்து அவளது அழகிய தோள் வாடிப் போகுமாறு சிதைத்தாய் எனத் தோழி, தலைவனிடம் தலைவி நோய்பட்டு

வருந்துகிறாள் என்று கூறும் கலித்தொகைப் பாடலில், இளிவரலில் ஒன்றான பிணியைப் பற்றி எடுத்துரைப்பதைக் காணலாம்.

### மருட்கை

ஒருவரிடத்தில் தோன்றும் வியப்பு, ஆச்சரியம், குழப்பம் சந்தோசம் ஆகியவை மருட்கை மெய்ப்பாடாக வெளிப்படுகின்றன. மருட்கையினை,

**புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே**
***(தொல். பொருள், மெய், நூ. 251)***

என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்குகின்றது. மருட்கையில் முதன்மையாகத் திகழ்வது புதுமையாகும். புதுமை என்பது எவ்விடத்தும் எந்தக்காலத்திலும் தோன்றாததோர் பொருள் தோன்றிய வழி வியத்தலாகும்.

***நனவினான், ஞாயிறே! காட்டாய் நீ ஆயின்,***
***பனை ஈன்ற மா ஊர்ந்து, அவன் வர, காமன்***
***கணை இரப்பேன், கால் புல்லிக்கொண்டு***
***கலித்தொகை., பா. 147. அடி.58-60***

தலைவன் தன் தலைவியை மடலேறிப் பெறும் வழக்கம் உண்டு. இப்பாடலில், குடும்பத்தினரைக் கடந்து வந்து ஊரிலுள்ளோரை விழித்துக் கூறுதல் பொருட்டு தலைவி மடல் ஏறுவதாகக் கூறுவது புதுமையாக உள்ளது. இப்பாடல் புதுமை என்னும் மெய்ப்பாட்டை நமக்கு எடுத்துக்காட்டுவதை உணரலாம்.

### அச்சம்

பிறராலும், பிற பொருள்களாலும் தோன்றும் நான்கு வகைப் பொருண்மையான் அச்சம் பிறக்கும்.

***அணங்கே விலங்கே கள்வர்தம் மிறைஎனப்***
***பிணங்கல் சாலா அச்சம் நான்கே***
***(தொல். பொருள், மெய், நூ. 252)***

பிறரால் அச்சம் பிறக்கும் என்ற வழி, பின்வரும் பாடலில் அச்சம் என்னும் மெய்ப்பாட்டைக் காணலாம். அச்சம் எனும் மெய்ப்பாட்டில் முதலில் வருவது அணங்கு என்னும் உணர்வாகும். அணங்கு என்பதை யாரும் கண்டு உயிருடன் மீள முடியாத அழகின் எல்லையாகவும், காண்பவரை வருத்தக்கூடிய உருவமாகவும் காண்கின்றனர். தலைவியின் அழகைக் கண்டு மயங்கி வந்து நெஞ்சழிந்தேன். அவளது அழகு அணங்காகி மேலும் மேலும் என்னை வருத்தும் காமநோயாக மாறுவதைத் தலைவியிடம் சொல்லிக் காட்ட அறியாதவனாய் இருக்கிறான். அது அவளது தவறில்லை என்று தலைவன் கூறுவதனை,

***அல்லல் கூர்ந்து அழிவுற, அணங்காகி அடரும் நோய்***
***சொல்லினும் அறியாதாய்! நின் தவறு இல்லானும்***
***கலித்தொகை., பா. 58. அடி.15-16***

என்னும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

### பெருமிதம்

பெருமிதம் என்பது யாவரோடும் ஒப்பு நில்லாது மேம்படுதல் என்பது பொருளாகும். அச்சம் ஒரு மனிதனை முடக்கிப் போடும். பெருமிதம் புகழ், சிறப்பு ஆகியவை முடக்கத்தில் இருந்து வெளிவரச் செய்யும். ஒருவன் பெருமிதத்தோடு வாழ வேண்டும் எனில் நேர்கொண்ட பார்வையோடு செயல்பட வேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு கல்வி, தறுகண், புகழ், கொடை முதலியவை அவசியம் என்பதனை,

**கல்வி தறுகண் இசைமை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே**
***(தொல். பொருள், மெய், நூ. 253)***

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் விளக்குகின்றார்.

***வல்லார் முன் சொல் வல்லேன் என்னைப் பிறர் முன்னர்க்***
***கல்லாமை காட்டியவள்***
***(கலித்தொகை., பா. 141. அடி.19-20***

என்ற பாடலில் தலைவன், தான் கற்ற கல்வியால் பெருமை கொண்டவனாகவும், ஆனால் காதலியின் பிரிவால் அவனது பேச்சிலும் ஆற்றல் குறைந்து, கற்று அறிந்தவர்களிடம் கூட அறிவில்லாதவன் போலத் தோன்றுவதைக் கண்டு வருந்துவதாகக் கூறப்படுகிறது. இது கல்வியால் வரும் பெருமிதம் என்ற மெய்ப்பாட்டினை உணர்த்துவதைக் காணலாம்.

**வெகுளி**

கோபம், சினம், கள்ளங்கபடமற்ற அப்பாவித்தனம் அல்லது எளிதில் ஏமாறும் தன்மையை வெகுளி என்பார்கள். வெறுத்தலால் வரும் வெகுளியைத் தொல்காப்பியர்,

**உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற**
**வெறுப்பின் வந்த வெகுளி நான்கே**
**(தொல். பொருள், மெய், நூ. 254)**

என்னும் நான்கு பொருள்களில் காட்டுகிறார்.

**நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினை வாங்க,**
**கொடிது ஓர்த்த மன்னவன் கோல் போல**
**கலித்தொகை., பா. 8. அடி.1-2**

என்பது அரசன் தன்கீழ் வாழும் குடிமக்களை நலிதற்பொருட்டு பாடப்படுவதாக அமைந்துள்ளது. இது வெகுளி என்ற மெய்ப்பாட்டில் இரண்டாவதாக இடம்பெறும் குடிகோள் என்பதைக் குறிப்பதைக் காணலாம்.

**உவகை**

உவகை என்பதன் பொருள் மகிழ்ச்சி, களிப்பு, ஆனந்தம், உவப்பு, இன்பம் மற்றும் அன்பு ஆகும்

**செல்வம் புலனே புணர்வு விளையாட்டென**
**அல்லல் நீத்த உவகை நான்கே**
**(தொல். பொருள், மெய், நூ. 255)**

என்று உவகையை, செல்வம், ஐம்புலன், வாழ்க்கை நுகர்ச்சி மற்றும் ஒன்று சேர்ந்து ஆடும் விளையாட்டாகும் என்கிறார் தொல்காப்பியர்.

**நுதலும் முகனும், தோளும், கண்ணும் .....**
**தொழலும் தொழுதான்; தொடலும் தொட்டான்; 18**
**கலித்தொகை., பா. 55. அடி.7-9**

என்ற பாடல் வரிகளில் தலைவன் தலைவியின் ஐம்புலன்களையும் வர்ணித்து மகிழ்வதாகவும், அதைக் கேட்டுத் தலைவியும் மகிழ்வதாகவும் அமைந்துள்ளது. இவ்வரிகள் உவமை எனும் மெய்ப்பாட்டில் வரும் ஐம்புலன் நுகர்ச்சியை எடுத்துரைப்பதைக் காணலாம்.

**முடிவுரை**

கலித்தொகையின் தலைவன், தலைவி, தோழி, நற்றாய் கூற்றுப் பாடல்களில் வரும் அக உணர்வுகளைத் தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாடுகளுடன் இணைத்துப் பார்த்து கருத்துக்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**அடிகுறிப்புகள்**

1. செ.வை. சண்முகம், கவிதை கட்டமைப்பு., ப.207

**துணைநூற்பட்டியல்**


1. சுந்தரமூர்த்தி., - தொல்காப்பியம் பொருள் அதிகாரம், பேராசிரியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.
2. தொல்காப்பியம் பொருள் அதிகாரம், இளம்பூரணர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.
3. அ. விஸ்வநாதன் (உ.ஆ) கலித்தொகை மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. செ.வை. சண்முகம், கவிதை கட்டமைப்பு., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.